# ஏறாவூர்பற்று பிரதேச சபை – 2017 , மட்டக்களப்பு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2017 ஆடிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம;

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஏறாவூர் பற்று பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) UNOPS நிறுவனத்திடமிருந்து 2017 ஆம் ஆண்டு நன்கொடையாக பெறப்பட்ட AE 8132 இலக்க மொன்டிரு வாகனம் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதனால் தேறிய சொத்து இத் தொகையினால் குறைத்து காட்டப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 276 மில்லியன் பெறுமதியுடைய திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் 2017 ஏப்ரல் UNOPS நிறுவனத்தினால் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள போதிலும் இச் சொத்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

இடமாற்றம் பெற்று சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் வேலையைவிட்டு நீங்கிய 10 ஊழியர்களுக்கு பிரதேச சபையினால் வழங்கிய ஊழியர் கடன்களின் நிலுவை ரூபா 941,942 தொகையை மீளாய்வாண்டு வரை அறவிட நடவடிக்கை எடுக்காமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது.

#### 1.3.3 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள். | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவற்றுடன் தொடர்புடைய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 59 | வியாபார வரிகள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டு ஆரம்பத்திலும் சபையின் எல்லைக்குள் கணிப்பீடு மேற்கொண்டு, அதற்கு அமைய வியாபார வரிகள் பற்றிய நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் இல.571 | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 641,548 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுத்துத் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற;கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் இல.1645 மற்றும் 1646 | வாகனங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

-----------------

2.1 நிதி விளைவுகள்

---------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 20,284,742 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 11,161,865 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 9,122,877 அதிகரிப்பை காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நிலுவையாக உள்ள குத்தகை பணமாகிய ரூபா 2,756,013 தொகையை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டு அறவிட வேண்டிய களியாட்ட வரி ரூபா 495,899 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டிற்கு களியாட்ட வரி கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் மற்றும் 134 ஆம் பிரிவிற்கமைய முறையே, சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக, சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனத்தால் நிறுவப்பட்ட 4 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு கட்டணம் அறவிடமுடியாமலும் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றிற்கு வீதவரிகள் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------

சபையில் மீளாய்வாண்டின் காசேட்டின்படி முதல் ஆறுமாத ஆரம்பத்திலும், இறுதியிலும் முறையே ரூபா 31 மில்லியன் மற்றும் ரூபா 40 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி கையிருப்பாக காணப்பட்டிருந்த போதிலும், இதனை வினைத்திறனான வழியில் முதலிட்டு வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுக்காததால், சபையானது முன் ஆறு மாதங்களில் ரூபா 1.7 மில்லியன் தொகை வருமானத்தை இழந்துள்ளது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------

3.1 செயலாற்றுகை

------------------

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

------------------------------------------

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி

நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

ஏறாவூர் பற்று சபையின் எல்லைக்குள் உள்ள மூன்று அரச வைத்திய சாலைகளில், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பிறந்த பிள்ளைகள் முறையே 306 மற்றும் 294 ஆக இருப்பதுடன் இவர்களில் நிறை குறைந்து பிறந்த பிள்ளைகளின் பிறப்பு ஆனது முறையே 40 மற்றும் 45 ஆக காணப்பட்டிருந்தும், தாய் சேய் நலன்புரி சேவைகளுக்காக 2016 ஆம் ஆண்டு ரூபா 150,000 ஒதுக்கப்பட்டிருந்தும், சபையினால் மேற்படி திட்டத்திற்கு செலவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதோடு, 2017 ஆண்டில் சுகாதார சௌபாக்கியம் பேணல், தாய் சேய் நலன் பராமரிப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டிற்காக ரூபா 350,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், ஒதுக்கிய தொகையில் சபையினால் ரூபா 57,306 குறித்த நோக்கத்திற்கு செலவு செய்யப்படாமல் வேறு தேவைகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது.

3.3 செயற்பாட்டுச் செயற்றிறனின்மை

கரடியனாறு குடிநீர் விநியோகத்திட்டம்

ஏறாவூர் பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கரடியனாறு எனும் இடத்தில், JICA கடன் உதவித்திட்டத்தின் மூலம் கிராமிய குடிநீர் வழங்கல் திட்டம் சுமார் 400 குடும்பங்களுக்கு குடி தண்ணீர் விநியோகிப்பதற்காக சுமார் ரூபா 40 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு மேலும் Paln Lanka தாபனத்திடமிருந்து ரூபா 1,782,820 பெற்று செலவு செய்யப்பட்டு 2015 ஆண்டு மே மாதம் தொடக்கம் ஏறாவூர் பற்று பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வரும் நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் இன்றுவரை மக்களுக்கு நீர் விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் ஆலோசனையைப் பெறாமல் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டதனால் சுத்தமான குடிநீரைப் பொது மக்களுக்கு விநியோகிக்க முடியாதிருந்ததுடன் மக்களின் எதிர்பார்ப்பும், தேவையும், நிவர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

3.4 ஒப்பந்த நிர்வாகம்

நிதி ஆணைக் குழுவின் 2016/01ம் இலக்க 2015 Mk; திசெம்பர் 30ம் திகதிய சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம், மூலதன நிதியின் கீழ் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப் படுத்தி உள்ளூராட்சி சபை வீதிகளை அமைக்கும் போது, கிறவல் இடுவதை தவிர்த்து அதிக காலம் பயன்படுத்தக்கூடிய வகையில் கார்பட் இடுதல், தார் போடுதல் மற்றும் கொங்கிறிட் போடுதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் என கூறப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணான வகையில் மீளாய்வாண்டில் சபையினால் 11 வீதிகளுக்கு மொத்தமாக ரூபா 7,653,816 கிறவல் இடுவதற்காக செலவிடப்பட்டிருந்தது.

4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவினத்தினை விட உள்ளபடியான மொத்த மூலதன செலவினம் 17% அதிகரித்து இருந்தமையானது, பாதீடானது முகாமையின் ஒரு

வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்
------------------------------------------

கீழ் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) பாதீடு தயாரிப்பு | பாதீடு தயாரிப்பின் போது கடந்த கால செலவுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | பாதைகளை அமைக்கும் போது நிதி ஆணைக்குழுவின் 2016/01 சுற்று நிருபத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) சொத்து முகாமைத்துவம் | சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |